1992 ஏப்ரல் 2]

பொறுப்பேற்றவுடன் 3 மாத காலத்திற்கு ஒருமுறை, விண்ணப்பங்களைக் கண்டிப்பாக ஆய்வு செய்து, கூடுதலாக உள்ள விண்ணப்பங்களையும் எடுத்து, உதவித் தொகை உடனுக்குடன் வழங்க வேண்டுமென்று உத்தரவை, சமூக நலத்துறைக்கு வழங்கியிருக்கிற காரணத்தினால், எங்கள் அன்புத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் இந்த உதவித் தொகை பெறுவதில் காலதாமதம் இல்லை என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனநிலை பாதிக்கப்பட்டவர்களை, பெற்றோர்களும், உற்றார் உறவினரும் கைவிட்டு, அவர்கள் ஆதரவற்ற நிலையில் ரோடுகளில் அலையும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்டவர்களுக்கும்கூட, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் பரிகாரம் கிடைத்தது என்கிற வகையில், ஊனமுற்றவர்களாக அவர்களையும் கருதி, அவர்களுக்கும் சமூக நலத்துறை மூலம் உதவிட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன வளர்ச்சி குறைந்தவர்களும், ஊனமுற்றவர்களாகத்தான் சமூக நலத்துறையால் கருதப்பட்டு, அவர்களுக்கென்று சில நிலையங்கள் அமைக்கப்பட்டு அதில் அவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அப்படிக் குறிப்பிட்டு யாரையாவது சொன்னால், அந்தப் பள்ளியில் சேர்க்கலாம் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 452, திரு. தா. வேடியப்பன். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

452—

அத்திமூர்—களியம் காலனிக்கு நிலம் கையகப்படுத்தும் அரசாணையை செயல்படுத்த நடவடிக்கை.

*6804 திரு. தா. வேடியப்பன் :

மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) போளூர் தொகுதி அத்திமூர்—களியம் காலனிக்கு நிலம் கையகப்படுத்தும் அரசாணை செயல்படுத்தப்படாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) இதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்து நிலம் கையகப் படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): போளூர் தொகுதி அத்திமூர்—களியம் காலனி மக்களுக்கு நிலம் கையகம் செய்து பயனாளிகளுக்கு வீட்டு மனைகள் வழங்க தொடர் நடவடிக்கை விதிகளின்படி எடுக்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு விரைவில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.

முற்பகல் 10–25

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய களியம் காலனி ஏறத்தாழ 100 குடும்பங்களுக்கு மேற்கொண்ட காலனியாகும். இங்கே வீட்டு மனைகள் இல்லாமல் நிறைய மக்கள் பனப்பாம்பட்டு ஏரிப் புறம்போக்கை அதிகமாக உபயோகப்படுத்திக் கொண்டிருக் கிறார்கள். எனவே, இந்தப் பகுதி மக்களுக்குத் தேவையான, ஒவ்வொரு குடும்பத்திலேயும் 2, 3 குடும்பங்களாகப் பிரியும் அளவுக்கு உள்ள அனைத்து மக்களுக்கும் தனித்தனியாக, வீட்டு மனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, களியம் காலனியில் குடியிருக்கும் குடும்பங்கள் 150 ஆகும். மொத்தம் உள்ள வீடுகள் 100. எனவே, 50 ஆதி திராவிட குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது. மிக விரைவில் வீட்டு மனைப் பட்டா வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி வழங்கப்படும் வீட்டு மனைப்பட்டாக் களுக்கு நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசின் சார்பில் வீடுகள் கட்டித்தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் அதிகப்படியான வீடுகளை உள்ளாட்சித் துறையின் மூலமாகக் கட்டிக் கொண் டிருக்கிறோம். இந்த ஆண்டு 50,000 வீடுகள் கட்டிமுடிக்கப் பட்டு விட்டன. எதிர்காலத்தில் இது பற்றி உள்ளாட்சித் துறையின் மூலமாகப் பரிசீலிக்கலாம்.

1992 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 453, திரு. கு. லாரன்ஸ். மாண்புமிகு மீனவளத் துறை அமைச்சர்.

453—

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரை கிராமங்களில் வாழும் மக்களுக்கு வீட்டுவசதி.

*1960 திரு. கு. லாரன்ஸ் :

மாண்புமிகு மீனவளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரை கிராமங்களில் வாழும் மக்களின் வீடுகள் இயற்கையின் சீற்றத்தினால் இடிந்து விழுவதைத் தடுக்க அம்மக்களுக்கு அரசு உறுதியான வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரைப் பகுதிகளில் அடிக்கடி கடலின் சீற்றத்தினால் நிலமற்ற ஏழைகள் தாங்கள் சுயமாகக் கட்டிய வீடுகளை இழந்து துன்பப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. தமிழகத்திலே இந்தக் கடற்கரைப் பகுதி என்பது அரபிக்கடலைத் தாங்கியிருக்கிற பகுதி. அரபிக் கடல் சற்றுச் சீற்றமான கடல் அலைகளைக் கொண்டிருக்கிற பகுதி. எனவே, அந்த நிலமற்ற, வீடற்ற ஏழைகள் அடிக்கடி பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு ஒரு நிரந்தரமான திட்டத்தை வகுக்கிற முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கையின் சீற்றத்தை எதிர்த்துப் போராடும் மீனவர்களின் துயரை நீக்கும்பொருட்டு நமது ஒப்பற்ற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1991-92-ல் 2,100 வீடுகளை கடற்கரை மாவட்டங்களில் உள்ள மீனவர்களுக்குக் கட்டித்தர உத்தரவிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையிலே கன்னியாகுமரி மாவட்டத்துக்கு மட்டும் 699 வீடுகள் கட்டித்தர உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.